DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| SC.No. | : | 05/2017 |
| Deposition of Witness for | : | P.W.3 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | அழகரசன் |
| Father's Name | : | சிங்காரம் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 17.03.2026

**முதல் விசாரணை:**

நான் வேப்பங்குளம் அம்பேத்கார் நகரில் வசித்து வருகிறேன். கடந்த 04.04.2015 ம் தேதியில் மாலை சுமார் 5.00 மணியளவில் வேப்பங்குளத்திற்கு தேனீர் அருந்துவதற்காக சென்றிருந்தேன். பஞ்சாயத்து அலுவலகத்தின் அருகாமையில் நின்று இருந்த போது கல்லல் காவல் துறையினர் சண்டை நடந்தது சம்பந்தமாக படம் வரைந்து கொண்டு இருந்தனர் அப்போது என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகும்**. என்னை போலீஸார் விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை:**

1. புகார்தாரர் ராமசாமி எனக்கு உறவினரா என்றால் இல்லை. அவர் எனக்கு தெரிந்தவரா என்றால் இல்லை. நான் காவல் நிலையத்திற்கு சென்று கையெழுத்து செய்யும் போது எத்தனை மணி இருக்கும் என்றால் நான் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் கையெழுத்து வாங்கும் போது என்ன விவரம் இருந்தது தெரியுமா என்றால் தெரியும்,

அதில் சண்டை நடந்தது சம்பந்தமாக எழுதியிருந்தார்கள். என்னிடம் காவல் துறையினர் சம்ப இடத்தில் வைத்து கையெழுத்து பெறவில்லை என்றும் காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து பெற்றனர் என்றும் தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.